# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.05.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## மருத்துவம் (திருத்தம்)

***(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*சுகாதார அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 12.00 தபாற் செலவு : ரூபா 150.00

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 39ஆஅ என்னும் பிரிவின்கீழ் விசேட மருத்துவர் ஒருவராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளினதும் பெயரையும் (1) ஆம் உட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட இடாப்பின் தனிவேறான ஒரு பகுதியில் பதிவதற்குப் பதிவாளரை இயலச்செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் ஒரு விசேட மருத்துவரின் தற்காலிகப் பதிவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 39ஆஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் பிரிவு 39ஆஅ வின்கீழ் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்பட்ட விசேட மருத்துவர்களுக்கான புதிய வெளிப்படுத்துகைப் படிவமொன்றை அறிமுகப்படுத்துவதற்கென முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துவதாகும்.*

ச.வ.ஓ. 7/2024

## (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 105 ஆம் அத்தியாயத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (5இ) என்னும் உட்பிரிவில், "பெயரை நீக்குதல் வேண்டும்.". என்னும் சொற்களை நீக்கிவிட்டு, "பெயரை நீக்குதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (5இ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(5ஈ) 39ஆஅ என்னும் பிரிவின்கீழ் விசேட மருத்துவராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்படுவதற்கு அவரது உரிமைக்கோரிக்கையை எண்பிக்கின்ற ஆளொவ்வொருவரினதும் பெயரை (1) ஆம் உட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட இடாப்பின் தனிவேறான ஒரு பகுதியில் பதிவாளர் பதிதல் வேண்டுமென்பதுடன் அவ்வாள் அதன்பின்னர் 39ஆ என்னும் பிரிவின்கீழ் விசேட மருத்துவர் ஒருவராகப் பதிவுசெய்யப்படின், விசேட மருத்துவர்களாகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்களைக் கொண்டுள்ள மேற்கூறப்பட்ட இடாப்பின் அத்தகைய பகுதியிலிருந்து அவ்வாளின் பெயரைப் பதிவாளர் வெட்டிவிடுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுவதுடன் இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"விசேட மருத்துவர் ஒருவராகத் தற்காலிகப் பதிவு

39ஆஅ. (1) பிரிவு 39அ வின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகைமையைக் கொண்டுள்ள ஆளொருவர், பிரிவு 39ஆ வின்கீழ் ஒரு விசேட மருத்துவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு முற்றேவைப்பாடொன்றாகப் பட்டப்பின் மருத்துவ நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையில் பட்டப்பின் மருத்துவ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சபைச் சான்றுப்படுத்துகையைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு விசேட மருத்துவராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்படுவதற்காக மருத்துவப் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) அத்தகைய ஆள்-

(அ) நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட நோக்கத்துக்காக மருத்து வப் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:-

(i) பட்டப்பின் மருத்துவ நிறுவகத் தினால் வழங்கப்பட்ட தொழில்புரிவதற்கான தகவு டைமைக் கடிதமொன்று;

(ii) ஒரு மருத்துவ அலுவலராக வும் விசேட மருத்துவராகவும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஒன்று அல்லது அதற்கு

மேற்பட்ட வைத்தியசாலைகளில் வதிபவரென்ற ஒரு தன்மையில் விண்ணப்பகாரர் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தமையைச் சான்றுப்படுத்துகின்ற அனுபவச் சான்றிதழ்;

(iii) அத்தகைய ஆள் எந்த நாட்டில் பட்டம்பெற்றாரோ அந்த நாட்டின் மருத்துவப் பேரவையுடன் பதிவுசெய்தமைக்கான எண்பிப்பாக முதலாவது பட்டத்தின் பதிவுச் சான்றிதழ்;

(iv) விண்ணப்பகாரர் எந்த நாட்டில் அவரது பட்டப்பின் தகைமையைப் பெற்றுக் கொண்டாரோ அந்த நாட்டின் இயைபான அதிகாரியினால் வழங்கப்பட்ட விசேட மருத்துவச் சான்றுப் படுத்துகையின் ஒரு பிரதி (சபைச் சான்றுப்படுத்துகை); அத்துடன்

(இ) அத்தகைய தற்காலிகப் பதிவுக்காக மருத்துவப் பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டிய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இரண்டாம் அட்டவணை" என்னும் சொற்களை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"பாகம் I"; அத்துடன்

(2) இரண்டாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"பாகம் II

[பிரிவு 39ஆஅ]

ஒரு தற்காலிக விசேட மருத்துவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான வெளிப்படுத்துகை

*பிரிவு 39அ வின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமையை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து

(விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:-

நான், 39அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமையைக் கொண்டுள்ளவரும் 39ஆ என்னும் பிரிவின்கீழ் ஒரு விசேட மருத்துவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு முற்றேவைப்பாடொன்றாகப் பட்டப்பின் மருத்துவ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சபைச் சான்றுப்படுத்துகையைப் பெற்றுக்கொள்வதற்கு இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் ஒரு விசேட மருத்துவராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளவருமான மேலே பெயர்குறிப்பிடப்பட்ட ஆளாகவுள்ளேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்

......... ஆம் ஆண்டு ........... மாதம் ..... ஆந்நாளன்று என்முன்னர் வெளிப்படுத்தப்பட்டது.

சமாதான நீதிவான்/
சத்திய ஆணையாளர்".

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்